



தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தாம்பரம் மேற்கு பகுதியில் உள்ள கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், தேர்தல் பணி ஒருங்கிணைப்பாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) ஆகியோரை மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் நேரில் சந்தித்து தேர்தல் பணிகள் குறித்து கேட்டறிந்து பணிகளை துரிதப்படுத்தினர். அருகில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் சட்டமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளர் கிருத்திகா தேவி, மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், பகுதி செயலாளர் இந்திரன், தொகுதி பார்வையாளர்கள் பரிதி இளம்சுருதி, மருதுகணேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி திருவாலங்காடு மேற்கு ஒன்றியம் கனகம்மாச்சத்திரம் பஜாரில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திமுக வேட்பாளர் வி. ஜி ராஜேந்திரன், ஆதரித்து திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியினருடன் வீதி வீதியாக சென்று உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர் உடன் திருவாலங்காடு மேற்கு ஒன்றிய செயலாளர் கூளூர்.எம்.ராஜேந்திரன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் காஞ்சிபாடி ஆர்.யுவராஜ் மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள்,ஒன்றிய கழக நிர்வாகிகள்,மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், ஏராளமான பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்துக் கொண்டனர்

## தமிழ்நாட்டில் அ.தி.மு.க.வை முற்றிலுமாக அழித்து விட்டது பா.ஜ.க.!

### பா.ஜ.க. – ஆர்.எஸ்.எஸ். சேர்ந்து தமிழ்நாடு, தமிழ்மொழி மீது தாக்குதல் நடத்துகின்றது!

# பா.ஜ.க.வின் சதித்திட்டத்தை நாடாளுமன்றத்தில் முறியடித்துள்ளோம்!

### பொன்னேரியில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் ராகுல்காந்தி கடும்தாக்கு!

திருவள்ளூர், ஏப்.19–

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தேர்தல் பொதுக்கூட்டத்தில் ராகுல் காந்தி பங்கேற்று பேசியதாவது:–

தமிழ்நாட்டு மக்களோடு எனவு உறவு மேம்பட்டு இருக்கிறது .

எனது இதயத்தில் தமிழ்நாட்டு மக்களுக்கு தனி இடம் உள்ளது.

நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவத்தை குறைக்க வேண்டும் என்பதுதான் பாஜகவின் முக்கிய நோக்கமாக உள்ளது. பாஜகவின் சதித்திட்டத்தை நாடாளுமன்றத்தில் நேற்று முறியடித்துள்ளோம் .



பாஜகவின் தொகுதி மறுவரையறை மசோதாவை எதிர்க்கட்சியினர் ஒன்றிணைந்து முறியடித்தோம். மகளிர் இடஒதுக்கீடு என்ற பெயரில் தொகுதி மறுவரையறை மசோதாவை தாக்கல் செய்தனர்.

பாஜகவும், ஆர்எஸ்எஸ் அமைப்பும் இந்தியாவின் பன்முகத்தன்மையை சீர்குலைக்க முயற்சிக்கின்றன. தமிழ் மொழி, தமிழர்களின் கலாச்சாரம், தமிழின் வரலாற்றை பாஜகவினர் அழிக்க முயற்சிக்கின்றனர்.

தமிழ்நாட்டை டெல்லியிலிருந்து ஆள வேண்டும் என்பதுதான் பாஜகவின் நோக்கம் ; அதற்கு ஒருபோதும் இடம்கொடுக்கக் கூடாது

பாஜகவும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் தமிழினத்திற்கு எதிரானவர்கள்.

பாஜகஆர்எஸ்எஸ் சதித்திட்டங்களை திமுகவும், கூட்டணிக் கட்சிகளும் முறியடித்து வருகின்றன.

சட்டமன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்கள் அனைவரும் வெற்றி பெற வேண்டும்.

மோடி, அமித்ஷா உத்தரவை செயல்படுத்தும் ஒருவரை தமிழ்நாட்டின் முதலமைச்சராக்க பாஜக நினைக்கிறது.

தமிழ்நாட்டின் எதிர்காலத்தை டெல்லிதான் தீர்மானிக்க வேண்டும் என்று பிரதமர் மோடி விரும்புகிறார்.

தமிழர்கள் யார் என்பதை பாஜக புரிந்து கொள்ளவில்லை.

டிரம்பிடம் மோடி சரணடைந்தது போல், டெல்லியிடம் சரணடையும் முதலமைச்சர் வேண்டும் என்று பாஜக விரும்புகிறது.

தமிழ்நாட்டில் அ.தி.மு.க.வை முற்றிலுமாக அழித்து விட்டது பா.ஜ.க.

தற்போதுள்ள அ.தி.முக. என்பது பாஜகவின் முகமூடி.

சமூகநீதி கொள்கைகள் மற்றும் பெரியாரின் சித்தாந்தங்களை பாஜக அழிக்க முயற்சிக்கிறது.

இவ்வாறு ராகுல் காந்தி பேசுகையில் குறிப்பிட்டார்.

### துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில்

# நான் செய்த சாதனைகளை எண்ணி பார்த்து எனக்கு வாக்களியுங்கள்!

### அமைச்சர் – பி.கே.சேகர்பாபு வீதி வீதியாக பிரச்சாரம்!

*சென்னை ஏப் 18*

துறைமுகம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி திமுக சார்பில் போட்டியிடும் அமைச்சர் பி கே சேகர்பாபு போட்டியிடுகிறார் தொகுதி முழுவதும் ஏராளமான பணிகள் செய்துள்ள நிலையில் அவர் செல்லும் இடங்களில் எல்லாம் பொதுமக்களும் பல்வேறு அமைப்புகளும் அவருக்கு சிறப்பான வரவேற்பு அளித்து வருகின்றனர் 56வது வட்டத்தில் உள்ள காவலர் குடியிருப்பு பகுதியில் பேசும்போது நான் இந்த பகுதிக்கு என்ன சாதனைகள் செய்துள்ளேன் என்ன திட்டங்கள் கொண்டு வந்துள்ளேன் என்பதை எண்ணிப் பார்த்து எனக்கு வாக்களியுங்கள கோடைகாலத்தில் அடிக்கடி ஏற்படும் மின்தடைகளுக்கும், மின்னழுத்த ஏற்றத்தாழ்வுகளுக்கும் நிரந்தர தீர்வு காண்பதற்காக தடையில்லா மின்சாரத்தை வழங்கக் கூடிய 33/11 மெகா வாட் கொண்ட துணை மின் நிலையத்தை டேவிட்சன் தெருவில் அமைத்துள்ளேன்





மின் மாற்றிகளை சுற்றி தடுப்பு வேலிகள் அமைத்து மின் விபத்துக்கள் ஏற்படுவதை தடுத்துள்ளேன் பிரகாசம் சாலையில் உள்ள தெரு விளக்குகள் அனைத்தும் மாற்றப்பட்டு புதிய தெருவிளக்குகள் அமைத்துக் கொடுத்துள்ளேன்

தொடர்ந்து 56 வது வார்டில் பிரச்சாரத்தில் பேசும் போது இளைஞர்கள் தவறான பாதைக்கு செல்லாமல் தடுப்பதற்காக ஆசிர்வாதபுரத்தில் விளையாட்டு திடல் மற்றும் நவீன உடற்பயிற்சி கூடம் அமைத்து கொடுத்தேன் இப்பகுதியில் மழை நீர் தேங்கா வண்ணம் மழை நீர் வடிகால் கால்வாய்களை கட்டியும்.. கழிவுநீர் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக ஆசிர்வாதபுரம், ஜெயமூர்த்தி தெரு 1 முதல் 5 வரை உள்ள தெருக்கள், திருவள்ளுவர் நகர் ஆகிய தெருக்களில் கழிவுநீர் பிரச்சினை ஏற்படா வண்ணம் புதிய கழிவுநீர் குழாய்கள் அமைத்தும்.. இப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டுமென்பதற்காக பி ஆர் என் கார்டன் பகுதியில் பம்பிங் ஸ்டேஷன் அமைத்து உள்ளேன் இப்பகுதி மக்களின் குடிநீர் தேவைகளை தீர்ப்பதற்காக தையப்பன் தெரு, பவளக்காரத் தெரு, ராமசாமி தெரு, புதுத்தெரு பகுதிகளில் அதிக விட்டமுடைய புதிய குடிநீர் குழாய்கள் பதிக்க பட்டுள்ளது

ஆசிர்வாதபுரத்தில் உள்ள 13 தெருக்கள் மற்றும் போர்ச்சுகீஸ் தெருவில் உள்ள 1 முதல் 5 சந்துகளையும் கான்கிரீட் சாலையாக மாற்றி உள்ளேன்.. பாரதி மகளிர் கல்லூரியில் புதிய வகுப்பறைகளை கட்டியுள்ளேன் இது போன்ற பணிகள் மேலும் தொடர வேண்டுமென்பதற்காக உங்களின் வேட்பாளராக நீங்கள் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வருபவராக உள்ள என்னை இத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக மீண்டும் தேர்ந்தெடுங்கள் என பேசினார்.



திரு.வி.க நகர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் மேயர் பிரியா ராஜன், தாயகம் கவி எம்.எல்.ஏ, தண்டலம் கிருஷ்ணமூர்த்தி, மாணவரணி துணை செயலாளர் தமிழ் க.அமுதரசன், தெற்கு பகுதி கழகச் செயலாளர் எம். சாமிகண்ணு மற்றும் வட்டப் பொறுப்பாளர் பா.பி. தாஸ் ஆகியோர் முன்னிலையில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சித் தோழர்கள், இளைஞர் அணியினர், மகளிர் அணியினர் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் பெருந்திரளாகக் கலந்துகொண்டு 75(அ) வட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் உதயசூரியன் சின்னத்திற்குத் தீவிரமாக வாக்கு சேகரித்தனர். இரவிச்சந்திரன் அவர்கள், கடந்த 5 ஆண்டு கால திமுக ஆட்சியில் திரு.வி.க நகர் தொகுதியில் நிறைவேற்றப்பட்ட புதிய பள்ளி கட்டிடங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், விளையாட்டுத் திடல்கள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகள் உள்ளிட்ட மகத்தான வளர்ச்சித் திட்டங்களை எடுத்துக்கூறி ஆதரவு திரட்டினார். வழிநெடுகிலும் திரண்ட பொதுமக்கள், வேட்பாளருக்கு ஆரத்தி எடுத்தும் மலர் தூவியும் எழுச்சியுடன் வரவேற்பு அளித்தனர். "மறவாதீர்! ஸ்டாலின் தொடரட்டும்.. திரு.வி.க. நகர் வெல்லட்டும்! என்ற முழக்கங்களுடன் கழக உடன்பிறப்புகள் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.



மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா ஜெய் நகர், சேமாத்தம்மான் நகர், எம்.ஜி.ஆர்.நகர் பகுதிகளில் வீடு வீடாக சென்று கழக அரசின் சாதனைகளை, 2026 ஆம் ஆண்டு கழக தேர்தல் அறிக்கை சிறப்பு அம்சங்களை தெரிவித்து வாக்கு சேகரித்தார்.

### அ.தி.மு.க.வின் 2026 தேர்தல் அறிக்கையில் உள்ள கான்கிரீட் திட்டத்திற்கு கடும் கண்டனம்!

# கீழ் பவானி கால்வாயைப் பாதுகாக்க தி.மு.க. உறுதி!

### கார்த்திகேய சிவசேனாபதி அறிக்கை!

*சென்னை ஏப்.19–*

அ.தி.மு.க.வின் 2026 சட்டமன்றத் தேர்தல் அறிக்கையில் கீழ் பவானி கான்கிரீட் திட்டத்திற்கு (LBP) வாய்க்காலைப் புதுப்பிப்பதாகக் கூறப்பட்டுள்ள வாக்குறுதிக்கு கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் மற்றும் சூழலியல் மண்டலத்தையும் சிதைக்கும் எந்தவொரு திட்டத்தையும் தி.மு.க. அனுமதிக்காது என்று அவர் மீண்டும் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2012ம் ஆண்டு முதல், கீழ் பவானி வாய்க்காலை கான்கிரீட் மயமாக்கும் இந்த தேவையற்ற திட்டம், ஆயக்கட்டு விவசாயிகளுக்கு பெரும் வேதனையையும், மன அழுத்தத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தி வருகிறது. உலக வங்கி நிதியுதவிக்கு எதிர்ப்பு தெரிவித்தும், சுற்றுச்சூழல் பாதிப்பு ஆய்வு மற்றும் விவசாயிகளுடன் கலந்தாய்வு கோரியும் தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டன. இதன் விளைவாக, அப்போதைய முதலமைச்சராக இருந்த அம்மையார் ஜெயலலிதா அவர்களால் இத்திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது.

இருப்பினும், 2020ல் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. அரசு, நமது சுற்றுச்சூழல் மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அழிக்கும் வகையில் மீண்டும் LBP கான்கிரீட் திட்டத்திற்கான அரசாணையை வெளியிட்டது.

2021 ல் தி.மு.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கீழ் பவானி பாசன விவசாயிகளின் நலன்கள் எக்காரணம் கொண்டும் பாதிக்கப்படாது என்று உறுதி அளித்தார், விவசாயிகளின் மீதான அவரது அக்கறையும், தொலைநோக்குப் பார்வையுமே இத்திட்டத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு முக்கிய காரணமாக இருந்தது. அவரது வழிகாட்டுதலின் கீழ், அமைச்சர் சு.முத்துசாமி அவர்களின் ஆதரவுடன், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 40க்கும் மேற்பட்ட கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. விவசாயிகளின் விருப்பங்கள் 100% செயல்படுத்தப்பட்டுள்ளது.

முத்தரப்பு பேச்சுவார்த்தையின் போது சில விவசாயிகள் ஒப்பந்த செயல் முறையை முழுமையாக முடிக்கவில்லை என்றாலும், அசல் வாய்க்காலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாமலும், மண் வாய்க்காலை எந்த இடத்திலும் கான்கிரீட்டாக மாற்றாமலும் இத்திட்டம் முறையாக முடிக்கப்படுவதை தி.மு.க. அரசு உறுதி செய்துள்ளது.

"எங்கள் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றியுள்ளார். இது விவசாயிகளுக்கான அரசு என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபித்துள்ளார், கீழ் பவானி வாய்க்கால் விவசாயிகளுக்கு நாங்கள் மீண்டும் உறுதி அளிக்கிறோம், உங்கள் வாழ்வாதாரத்தை சிதைக்கும் இத்தகைய திட்டங்களை தி.மு.க. அரசு ஒரு போதும் அனுமதிக்காது. அமைச்சர் சு.முத்துசாமி அவர்களின் தலைமையிலான மாவட்ட நிர்வாகமும், நானும் எப்போதும் உங்களுக்கு அரணாக இருப்போம். "சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தும் திட்டத்தை அ.தி.மு.க. மீண்டும் கொண்டு வரத்துடிக்கும் வேளையில், கீழ் பவானி வாய்க்காலின் அசல் தன்மையை வருங்கால சந்ததியினருக்காகப் பாதுகாக்கும் கேடயமாக தி.மு.க. விளங்கும் என்று கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இராயபுரம் மேற்கு பகுதி வார்டு 53 க்கு உட்பட்ட பெரியபாளையத்தம்மன் கிழக்கு வீதியில் இட்லி கடை வியாபாரியிடம் வேட்பாளர் டாக்டர் சுபேர்கான் உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தார். உடன் மேற்கு பகுதி செயலாளர் வா.பெ. சுரேஷ் , வார்டு மாமன்ற உறுப்பினர் பா. வேளாங்கண்ணி மற்றும் கழக நிர்வாகிகள் மற்றும் மு.க.பாண்டியன் மற்றும் மாணவரணி பகுதி துணை அமைப்பாளர் பா. சக்திதாசன் சிலம்பரசன் மற்றும் கூட்டணி கழகத் தோழர்கள் உடன் இருந்தனர்.